**செ.வெ.எண்:03** **நாள்-02.09.2019**

# பத்திரிக்கைச் செய்தி

18.07.2019 ம் தேதி நடைபெற்ற சட்டமன்ற கூட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்ற 110 வது விதியின் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் சிறப்பு குறைதீர் கூட்டம் செயல்படுத்திட ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி மாவட்டத்திலுள்ள அனைத்து கிராம / நகரப் பகுதிகளிலும் உள்ள பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை 31.08.2019-க்குள் பெற்று, 25.09.2019-க்குள் கோரிக்கை மனுவின் மீதான நடவடிக்கைகளை முடிவு செய்து, 30.09.2019 மாத இறுதியில் மனுவிற்கான பயன்களை பொதுமக்களுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் தலைமையில் வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் இத்திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு கடந்த 21.08.2019ஆம் தேதி அரியலூர் நகராட்சியில் இச்சிறப்பு குறைதீர் கூட்டம் துவங்கப்பட்டு, நடைபெற்று வருகிறது. அதுசமயம் அனைத்து கிராம / நகரப்பகுதிகளில் உள்ள பொதுமக்கள் முதியோர் உதவித்தொகை மற்றும் இதர உதவிதொகைகள், வீட்டுமனைப்பட்டா, பட்டா மாற்றம் மற்றும் அடிப்படை வசதிகளான சாலை, தெருவிளக்கு, சுகாதாரம் மற்றும் நலம், குடிநீர் வழங்கல் குறித்து கோரிக்கை மனுக்களை நேரில் வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டு, அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம / நகரப்புறங்களில் 21.08.2019 முதல் 31.08.2019 வரை சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலகங்களில், பொதுமக்களிடமிருந்து மனுக்கள் பெற அலுவலர்கள் குழு நியமனம் செய்யப்பட்டு, 31.08.2019 வரை சம்மந்தப்பட்ட குழு அலுவலர்களால் மனுக்கள் பெறப்பட்டுள்ளது.

மேலும், 21.08.2019 முதல் 31.08.2019 வரை முகாம் நடைபெற்ற கிராமங்களில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களில் 50-க்கு குறைவான மனுக்கள் வரப்பெற்ற பொட்டவெளி, இராயம்புரம், சென்னிவனம், சாத்தமங்கலம், ஆனந்தவாடி, உஞ்சினி, பிராஞ்சேரி, காரைக்குறிச்சி, நாயகனைபிரியாள், குலோத்துக்கநல்லூர், ஓலையூர், ஸ்ரீராமன் ஆகிய கிராமங்களில் **04.09.2019** அன்றும் மற்றும் சன்னாவூர் (வ), மேலப்பழூர், கோவில் எசனை (மே), குலமாணிக்கம் (கி), விழுப்பணங்குறிச்சி, நாகல்குழி, அணைக்குடம், உட்கோட்டை (தெ), வெத்தியார் வெட்டு, பிச்சனூர், தர்மசமுத்திரம், ஆத்துக்குறிச்சி, ராங்கியம் ஆகிய கிராமங்களில் **05.09.2019** ஆகிய இரு தினங்களுக்கு காலை 09.00 மணி முதல் 01.00 மணி வரையிலும் மீண்டும் மனுக்கள் பெறப்படவுள்ளது. எனவே, தங்கள் கிராமத்தில் நடைபெறவுள்ள சிறப்பு குறை தீர்வு நாளில் பொதுமக்கள் மேற்கண்ட தங்களது குறைகள் அடங்கிய கோரிக்கை மனுக்களை அந்தந்த கிராமத்திலேயே உள்ள கிராம நிர்வாக அலுவலர் அலுவலகங்களில் மனுக்கள் பெறும் குழுக்களிடம் மனுக்களை நேரில் அளித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**